நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.104 /2020

## P.W. 8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணி |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | 428 திருவள்ளுவர் தெரு, |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 8 |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.18PM )

1. நான் தற்போது சேலம் மூனாங்கரட்டில் குடியிருக்கிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய மச்சனன். எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் அ.சா1 குடும்பத்தாருக்கும் தட வழி பிரச்சனை இருந்து வந்தது. அ.சா1 அந்த தடத்தில் நடந்து சென்ற போது சேகர்

குடும்பத்தார் அ.சா1யை கல்லால் அடித்து விட்டதாக சொன்னார்கள். அதை தடுக்க வந்த அ.சா1ன் தம்பி மணிவண்னனை எதிரிகள் கல்லால் அடித்து ரத்த காயம் ஏற்பட்டு அழைத்து சென்றதாக சொன்னார்கள். இந்த தகவல் தெரிந்து சேலம் மருத்துவமனை சென்று காயம் பட்ட நபர்களை பார்த்தேன்.

2. ஐந்து நாட்கள் கழித்து நான்.அ.சா1ன் வீட்டிற்கு வந்தேன். காலை 8 மணி அளவில் அ.சா1ன் வீட்டிற்கு நான் வந்தேன். அங்கு போலீசார் தங்கராஜ் வீட்டை சுற்றி படம் வரைந்து எழுதி என்னிடமும் செல்வமணி என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவ இடத்திற்கு வந்த கல் மற்றும் தேக்சா ஆகியவற்றை எடுத்துக் கொண்டு எங்கள் இருவரிடமும் காலை 8.45 மணிக்கு கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உளள் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான்.கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. அ.சா 2 மணிவண்னன் என்னுடைய மச்சனன் என்றால் சரிதான். அ.சா 1 தங்கராஜ் மற்றும் அ.சா2 மணிவண்னன் ஆகிய இருவரும் சேலம் மருத்துவமனையில் தான் சிகிச்சையில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை 7ம் தேதி சென்று பார்த்தேன் நேரம் சரியாக தெரியவில்லை. அவர்கள் சேலம் மருத்துவமனையில் உள்ளார்கள் என்று சம்பவம் நடந்த 3ம் தேதியே எனக்கு தெரியும். போலீஸ் விசாரணையில் நான் சேலம் மருத்துவமனைக்கு சென்ற அவர்களை பார்த்தாக நான் சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கையொபப்பம் மட்டும்தான் வாங்கினார்கள்.

2. இரண்டு கற்கள் மட்டும் ஒரு தேக்சா எடுத்தார்கள். சம்பவ இடத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன். நான் சொன்னவாறு சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் என் முன்னிலையில் கற்களை கைப்பற்றினார்கள் என்பது பொய்

என்றாலும் , எனது மச்சனன் இருவரும் சேலம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது நான் இங்கே வந்தேன் என்று சொல்வது பொய் என்று சொன்னாலும் அ.சா 1 எனது மச்சினன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.37PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**